# தில்லை அருகாமையில் உள்ள புண்ணிய தலங்கள் - ஓர் ஆய்வு

**த.சுபஸ்ரீ மற்றும் வீ.சுதா**
முனைவர்பட்ட ஆய்வாளர்கள்
வரலாற்றுத் துறை
தூய வள்ளலார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கடலூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

**முன்னுரை**

9ஆம் நூற்றாண்டில் சோழர்களால் கட்டப்பட்ட அருள்மிகு நடராசர் கோயிலால் தில்லையம்பதி எனப்படும் சிதம்பரம் தெய்வீக நகரமாவதுடன் சோழர்களின் தெய்வீகப்பற்றும், மக்கள் சேவையும் உணரப்படுகிறது. இச்சிறப்பு மிக்க தில்லை தலத்தின் அருகாமையில் சில புண்ணியத்தலங்கள் உள்ளன. தில்லையைத் தரிசிப்பவர்கள் இக்கோவில்களையும் வணங்கப் பயணிக்கின்றனர். இவ்வாறு பல புண்ணியத்தலங்கள் ஒருங்கே அமைந்த பகுதியாகவும் விளங்குவதோடு, தேவாரப்பாடல் பாடப்பெற்ற புண்ணியத்தலங்களாகவும் விளங்குவதாக வரலாறு குறிப்பிடுகின்றன. எனவே இக்கட்டுரையில் தில்லை அருகாமையில் உள்ள புண்ணியதலங்களின் பெருமையை விளக்குவதே முதன்மை நோக்கமாகமாகும்.

**திருவேட்களம்**

அர்ச்சுனனுக்குப் பாசுபதம் அருளிய தலம் என போற்றப்படும் திருவேட்களம், சிதம்பரம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. மூலவராக இறைவன் பாசுபதேச்சுவரர், இறைவி நல்லநாயகி, ஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் பாடல் பெற்றத் தலமாகவும் இது உள்ளது.

**திருநெல்வாயில்**

இதன் இன்றைய பெயர் சிவபுரி. சிதம்பரத்திலிருந்து தென் கிழக்கே மூன்று கல் தொலைவிலுள்ளது. இறைவன் உச்சி நாதேச்சுரர்,இறைவி கனகாம்பிகை ஞானசம்பந்தர் பாடல் பெற்றத்தலம். இக்கோவிலிலேயே திருக்கழிப்பாலை கோவிலும் உள்ளது.

**திருக்கழிப்பாலை**

இது முன்பு கொள்ளிடத்துக்கு வடகரையில் இருந்தது. வெள்ளம் இதை அழித்தப்பின் மூர்த்தங்களைச் சிவபுரி கோவிலில் அமைத்தார்கள். இறைவன் பால்வண்ணநாதர், இறைவி வேதநாயகி, சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடல் பெற்றது.

**திருநாரையூர்**

சிதம்பரத்துக்குத் தென் மேற்கில் பத்துகல் தொலைவிலுள்ளது. சம்பந்தரும், நாவுக்கரசரும் வழிபட்ட தலம். இறைவன் சுந்தரேசர்,

இறைவி திரிபுரசுந்தரி, திருமுறைகள் வெளிப்படுத்திய பொள்ளாப்பிள்ளையர்( உளியால் செதுக்கபடாத சுயம்பு) தலம். நம்பியாண்டார் நம்பி பிறந்த ஊர்.

**திருக்கனாட்டு முள்ளூர்**

இத்தலத்தை இப்பொழுது கானாட்டாம்புலியூர் என்கின்றார்கள். சுந்தரர் பதிகம் பெற்றது, பதஞ்சலி பூசித்த தலம் என பல சிறப்புப் பெற்றது. இறைவன் பதஞ்சலி நாதேஸ்வரர், இறைவி கானார்குழலி, ஓமாம்புலியூரிலிருந்து மூன்று கல் தொலைவில் உள்ளது.

**ஓமாம்புலியூர்**

காட்டுமன்னார்குடியிலிருந்து நான்கு கல் தூரத்தில் உள்ளது. கொள்ளிடத்துக்கு அக்கரை, புலிக்குப் பயந்து ஒரு வேடன் மரத்தின்மீதேறிவிட்டான், புலி நகருவதாயில்லை. அவன் ஏறிய வில்வமரத்தின் இலைகளைப் பறித்து அதன் மீது இரவு முழுவதும் போட்டுகொண்டிருந்தான். அவன் போட்ட இடத்தில் ஒரு லிங்கம் இருந்தது அன்று சிவராத்திரி அப்புண்ணியதினத்தில் வேடன் செய்த வில்வ அர்ச்சனை அவனுக்கு முக்தி அளித்தது. சம்பந்தர், நாவுக்கரசர் பாடியதலம்.

**திருகடம்பூர்**

காட்டுமன்னார்குடியிலிருந்து மேற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. கோயில் தேர் வடிவம் கொண்டதாம். சுரக்கோயில் என்ற பெயர் ஏற்றது. சம்பந்தர், நாவுக்கரசர் பதிகம் பெற்ற தலம். இறைவன் அமுதகடேச்வரர், இறைவி சோதிமின்னம்மை ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்ற அப்பரின் அற்புத வாக்கு எழுந்தது இங்கேதான்.

**திருமண்ணணிப்படிக்கரை**

ஓமாம்புலியூருக்கு இரண்டு கல் தொலைவிலுள்ளது. இதை இன்று இலுப்பப்பட்டு என அழைக்கிறார்கள். சிவன் நஞ்சுண்டபோது அது உள்ளே சென்று விடாமல் உமை கழுத்தைப்பிடித்துத் தடுத்தாள் . சிவன் நீலகண்டன் என்ற நாமம் பெற்றார். இந்நிகழ்ச்சி இங்கு நடந்ததாகப் புராணங்கள் புகழ்கின்றன. இறைவன் நீலகண்டர், இறைவி அமிர்தகரவல்லி.

**திருக்கூடலையாற்றூர்**

சிதம்பரத்திலிரந்து மேற்கே பதினாறு கல் தொலைவில் உள்ளது. சுந்தரர் விருத்தாசலம் செல்லும்போது இறைவன் ஒர அந்தணனாகத் தோன்றி இவ்வூர் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றுக் கூறி பதிகம் பெற்றுக் கொண்ட தலம். இறைவன் நெறிகாட்டுநாயகர், இறைவி புரிகுழலாம்பிகை.

**திருச்சோழபுரம்**

ஆலப்பாக்கம் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டுகல் தொலைவிலுள்ளது. உப்பங்குழி, தோணியில் கடக்க வேண்டும், தியாகவல்லி என்ற பெயரும் உண்டு. ஞானசம்பந்தர் பதிகம் கொண்டது. இறைவன் சோழபுரநாதர், இறைவி சோழபுர நாயகி.

**திருத்தினைநகர்**

புதுச்சத்திரம் புகைவண்டி நிலையத்திலிருந்து மூன்று மைல். இறைவனுக்கு நிவேதனம் தினை. இவ்வூரில் உள்ள தாமரைப் பொய்கையில் மூழ்கினால் பெருநோய் அகல்கிறது என்கிறார்கள் . சுந்தரர் பதிகம் ஏற்றது. இறைவன் சிவக்கொழுந்தீசர், இறைவி ஒப்பிலாநாயகி.

**சீர்காழி**

காழி என்று கூறியவுடனே நம் நினைவில் தோன்றுபவர் காழிப்பிள்ளையாரான சம்பந்தர். சம்பந்தர் அவதாரம் செய்த திருத்தலமே சீர்காழி. சிதம்பரத்திற்கு தெற்கே பதினாறு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள பாடல் பெற்ற பழம்பதி சீர்காழி. இங்குள்ள கோயிலில் எழுந்தருளியுள்ள நாதர் தோணியப்பர். நடைபெறும் திருவிழாக்களுள் சிறப்பு வாய்ந்தது திருமுலைப்பால் உற்சவம்.

சீர்காழியில் சிவபாத இருதயரது புதல்வராகப் பகவதி அம்மையார் வயிற்றில் பிறந்தார் திருஞானசம்பந்தர். மூன்றுவயது பாலகனாக இருந்தபோது ஒருநாள் நீராடச் சென்ற தந்தையுடன் தாமும் சென்றார். தந்தைக் குளத்தில் நீராடிக் கொண்டிருக்கும்போது கரையில் இருந்த சம்பந்தர் பசியினால் அழுதார். அவ்வழுகுரலைக் கேட்ட இறைவனாகிய தோணியப்பரும், அன்னை பெரியநாயகியும் அங்குத் தோன்றினர். அன்னை தம் பாலைக்கறந்து அதில் சிவஞானத்தையும் கலந்து குழந்தைக்கு ஊட்டிவிட்டு மறைந்தருளினார். கரையேறி வந்த தந்தை, குழந்தையின் வாயில் பால் வடிவதைக் கண்டு 'யார் கொடுத்த பாலைக் குடித்தாய்?' என அதட்டிக் கேட்டபோது அருள்ஞானம் பெற்ற அக்குழந்தை 'அதோ' என் வான வெளியைச் சுட்டிக்காட்டி.

**"தோடுடைய செவியன் விடையேறிஓர்**
**தூவெண் மதிசூடிக்**
**காடுடைய சுடலைப் பொடிப்பூசியென்**
**உள்ளங்கவர்கள்வன்**
**ஏடுடைய மலரான் முனை தாள்பணிந்**
**தேந்த வருள்செய்த**
**பீடுடைய பிரம்மாபுரம் மேவிய**
**பெம்மான் இவனன்றே"**

தன் குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டியது இறைவி என்பதுணர்ந்த சிவபாத இருதயர் மகிழ்ந்து பலவாறு போற்றி வணங்கித் துதித்தார். இந்நிகழ்ச்சியே திருமுலைப்பால் உற்சவமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. சீர்காழி கோயில் மதில்களையும் கோபுரங்களையும் கொண்டதொரு பெரிய கோயில். சீர்காழிக்கு, தோணிபுரம், வேணிபுரம், புகழி, வெங்குரு, கழுமலம் முதலான பண்ணிரண்டு பெயர்கள் உண்டு.

இக்கோயில் தருமபுர ஆதீனத்தின் மேற்பார்வையில் இருந்து வருகிறது. 1400 ஏக்கர் நஞ்சை நிலங்களும், 300 ஏக்கர் புஞ்சை நிலங்களும் கொண்டது. பூசையும் திருவிழாக்களும் குறைவின்றி நடத்தி வருகின்றனர். இக்கோயிலில் 47 கல்வெட்டுக்கள் உள்ளன. சோழமன்னர்களின் கல்வெட்டுக்கள், வீரவிருப்பண்ண உடையார் கல்வெட்டுக்கள், கிருஷ்ணதேவராயர் கல்வெட்டுக்கள் ஆகியவை உள்ளன. இவற்றில் 'இராசராச வளநாட்டு திருக்கழுமல, நாட்டு பிரமதேசம், திருகழுமலம்' என இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது. அக்கால பழக்கவழக்கங்கள், நிலஅளவை முறைகள், தலம், மூர்த்தி ஆகியவற்றின் அமைப்புகள், கோயிலுக்கு மன்னர்கள் அளித்துள்ள நிவந்தங்கள் முதலியன பற்றி செய்திகள் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன.

**திருஞானசம்பந்தரின் திருமண கோலம், இக்கோயிலில் உள்ளது.**

**"…………….வைத்தீசுவரன் கோயில்**
**' மந்திரமும் த ந்திரமும் மருந்து மாகி**
**தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்**
**திரிபுரங்கள் தீஎழத்தின் சிலையகக் கொண்ட**
**போரானைப் புள்ளிருக்கு வேளூரானை**
**போற்றாதே ஆற்றனால் போக்கி னேனே"**

என அப்பர் அடிகளால் உருகிப்பாடப்பெற்ற உன்னத திருத்தலம் புள்ளிருக்கு வேளூர். ' வைத்தீசுவரன் கோயில்' எனப்படும் புள்ளிருக்குவேளூர் சிதம்பத்திற்கு தெற்கே 22கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. தேவார ஆசிரியர்களாலும், குமரகுருபரர் போன்ற அருட்கவிஞர்களாலும் பாடப்பெற்ற அழகியத்தலம் இது.

வேளூரில் எழுந்தருளியுள்ள இறைவர் வைத்தியநாதர். மக்களது பிறவிப்பிணியை நீக்கி மனநோய் தீர்க்கும் மருத்துவராக விளங்குவதால் இவர் 'வைத்தியநாதர்' எனப்பெயர்பெற்றார்.

தென்னக இரயில்வேயில் மயிலாடுதுறைக்கும் சீர்காழிக்கும் இடையே அமைந்துள்ள இத்தலக் கோயில் தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

**பெயர்காரணம்**

புள்ளிருக்குவேளூர் என்பது காரணபெயர்.‘புள்’ ஆகிய சடாயுவும், இருக்கு எனப்படும் ருக் வேதமும், வேல் எனப்படும் முருகனும், ஊர் எனப்படும் சூரியனும் பூசித்த தலமாதலின் இது புள்ளிருக்கு வேளூர் எனப்படும்.

**கல்வெட்டுக்கள்**

இக்கோயில் பெருங்கோயில் ஆனதால் சுற்று பிரகாரங்களில் எண்ணற்ற மூர்த்திகள் கோயில் கொண்டுள்ளனர். இவற்றில் 8 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில சிதைந்துள்ளன. இக்கல்வெட்டுக்கள் குறிப்பிடத்தக்கன. கி.பி 12ம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆட்சிசெய்த விக்ரமசோழன் காலத்தது. முதல் குலோத்துங்க சோழன் மகன் இவன். இவனை பற்றிய மெய்கீர்த்தி ஒன்று சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**சித்தாமிர்த தீர்த்தம்**

கோயிலின் தெற்கு வெளி பிராகாரத்ததை அடுத்து ‘சித்தமிர்த தீர்த்தம்’ என்ற குளமுள்ளது இதில் நீராடுவோர் உடற்பிணியும், உள்ளப் பிணியும் நீங்கி நல்வாழ்வு பெறுவர்

**முடிவுரை**

தில்லைத்தலத்தில் மற்றும் சில திருக்கோயில்கள் உள்ளன. அவற்றுள் உமாமதி சிவத்தின் கோயில், திருகலாஞ்சேரியில் உள்ள மறைஞானசம்பந்தர் சமாதி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பக்தர்கள் இவ்விடங்களையும் கண்டு வழிபடுதல் முறை.

**அடிக்குறிப்புகள்**

1. தில்லை பெருங்கோயில் வரலாறு, shodhganga.com
2. மெய்யப்பன்., தில்லைத்திருக்கோயில்., மணிவாசகம் பதிப்பகம், சென்னை – 1998.பப. 116-118.
3. வைத்தீசுவரன் கோயில் வரலாறு, shodhganga.com.
4. மெய்யப்பன்., தில்லைத்திருக்கோயில்., மணிவாசகம் பதிப்பகம், சென்னை- 8, 1998. ப-120.
5. மேலது., ப. 105